

வேலூர் மாவட்டம் காட்பாடியில் நடந்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற திட்டத்தின் கீழ் வீடு, வீடாகச் சென்று கழக பொதுச் செயலாளர் நீர்வளம், சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் தி.மு.க. உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை தொடங்கி வைத்தார். அருகில் மாநகராட்சி துணை மேயரும் தெற்கு பகுதி தி.மு.க. செயலாளருமான எம்.சுனில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க வேலூர் மாவட்டம் கே.வி. குப்பம் சட்டமன்றத் தொகுதி அம்மானகுப்பம் பகுதியில் ‘ஓரணியில் தமிழ்நாடு ‘ உறுப்பினர் சேர்க்கை வேலூர் மாவட்ட செயலாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் வீடு வீடாகச் சென்று அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்து விளக்கி உறுப்பினர் சேர்க்கை சேர்த்தார் இதில் ஒன்றிய செயலாளர் கே.சீத்தாராமன், ஒன்றிய நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் உடன் இருந்தனர்.

### துணை முதல்வர் வருகை:

# திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் உற்சாக வரவேற்பு!

## கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்!

திருவண்ணாமலை, ஜூலை 9 -

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு எல்லையில் உற்சாக வரவேற்பு அளிப்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சிறப்புரை யாற்றினார்.

நேற்று (08.07.2025-செய்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோயி லூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில்திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாடாளு மன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான சி.என்.அண்ணாதுரை தலைமை வகித்தார்.

மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜ சேகர், எம்.ரமேஷ், எஸ். சதிஷ்குமார், டி.திலிப் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.



திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொடர்ந்து, கழகத்தின் வெற்றி அணியாக மாற்றிக்காட்டிய, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் ஜூலை13 அன்று திருவண்ணாமலை மாவட்டம் வருகைத் தர உள்ளார். அவருக்கு மாவட்ட கழகத்தோடு இணைந்து எழுச்சி யான வரவேற்பு அளிப்பதென இந்த இளைஞர் அணிக் கூட்டம் தீர்மா னிக்கிறது.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின், இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதல்வரு மான உதயநிதிஸ்டாலின் அவர்களின் ஆணையையேற்று, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சருமான எ.வ.வேலுவின் வழிக் காட்டுதலின்படி, திருவண்ணா மலை தெற்கு மாவட்டம் முழுவதும் கழகத்தின் இளம் பேச்சாளர்களைக் கொண்டு, கலைஞர் பிறந்த நாள் - கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி ஜூலை15 தேதி முதல் தெருமுனைக் கூட்டங்கள் எழுச்சியாக நடத்துவதென இந்த இளைஞர் அணிக் கூட்டம் தீர்மானிக்கிறது.

இல்லந்தோறும் இளைஞர் அணி நிகழ்ச்சியை மேலும் தீவிரப்படுத்தி, அதிகளவு இளைஞர் அணி உறுப்பினர்களை சேர்த்து, தமிழ்நாட்டிலேயே அதிக உறுப்பினர்களை சேர்த்த மாவட்டம் என்ற பெருமையை அடைய கடுமையாக உழைப்போம் என இந்த இளைஞர் அணிக் கூட்டம் தீர்மானிக்கிறது.

ஓரணியில் தமிழ்நாடு என்ற பரப்புரையில் நமது இளைஞர் அணி நிர்வாகிகளும், தோழர்களும் அதிகளவு கலந்து கொண்டு, கழகத்திற்கு உறுப்பினர் சேர்த்தலுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென இந்த இளைஞர் அணிக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மா னங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவ அணி துணை தலைவர் டாக்டர் எ.வ. வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ. கண்ணன், தலை மைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு. பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜய லட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தர ராசன், மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீ ர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி. சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

நிறைவாக நகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ் நன்றி கூறினார்.


